ஒன்றியப் பணியாளர்களும் அல்ல. ஊராட்சிகளின் முழுநேரப் பணியாளர்களும் அல்ல நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய விகிதப் பணியாளர்களும் அல்ல, ஆனால் ஊராட்சிகளில் பணிக்கூலி பெறுபவர்களாக, ஊராட்சித் தலைவர்களால் நியமிக்கப்பட்டு, ஊராட்சி நிதியிலிருந்து பணிக் கூலி அளிக்கப்படுகின்றவர்கள். இவர்கள் ஊதியம் பெறும் நிர்வாகப் பணியாளர்கள் அல்லவ்வ அல்ல. இந்தப் பணிக்கூலியும் ஒரே சீராக இல்லாமல், ஊராட்சிக்கு ஊராட்சி மாறுபட்ட விதத்தில், ரூபாய் 30 முதல் ரூபாய் 150 வரை அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்தப் பம்ப் பணியாளர்களின் பணி, மின்விசை ஸ்விட்ச்சுகளை ஏற்றுவதும், அவற்றை அணைப்பதும்தான். இவற்றைக் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளிலும் பொங்கல் பரிசு வழங்கவேண்டாம் என மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இதுவரை எந்த ஆண்டிலும் பொங்கல் பரிசு அவர்களுக்கு வழங்க அனுமதி அளிக்கப்படவில்லை. மேலும் பொங்கல் பரிசு மேற்படி பணியாளர்களுக்கு வழங்குவது என்றால், ரூபாய் 400 வீதம் 19,000க்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு 76 இலட்சம் ரூபாய் செலவாகும். இச்செலவினம் ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படவேண்டும். சில ஊராட்சிகளில் 4 மேல்நிலைத் தொட்டி பம்ப் ஆப்பரேட்டர்கள் உள்ளதால், அந்த ஊராட்சிகளுக்கு 1600 ரூபாய் வரை செலவினம் மேற்கொள்ள நேரிடும். இவற்றை எல்லாம் எண்ணிப்பார்த்துதான் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் கடலோரக் கிராமங்களில் புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்டுள்ள உயிர்சேதம் மற்றும் ஏனைய சேதங்களையொட்டி மேற்கொள்ள வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் 7—1—90 அன்று கடுமையான புயலின் காரணமாக, கடலோரக் கிராமங்களாகிய நம்புதாழை, உள்ளிமலை, காரங்காடு ஆகிய கிராமங்கள் கடுமையாகப்பாதிக்கப் பட்டிருக்கின்றன. நம்புதாழையிலிருந்து இரண்டு படகுகளிலே சென்றவர்கள் மொத்தம் 13 நபர்கள் அப்போது புயலில் சிக்கி இறந்திருக்கிறார்கள். அங்கே அரசு ஆரம்ப நிலையிலே புயல் அறிவிப்பை வானொலி மூலமாகவோ மற்ற எந்தச் செய்திகளின் மூலமாகவோ அறிவிக்கவில்லை. அவ்வாறு அறிவித்திருந்தால் அந்த 13 பேர்களுடைய உயிர்களைக் காப்பாற்றி இருக்கலாம். அந்தக் கிராமங்களிலே பல படகுகள் சேதம் அடைந்திருக்கின்றன. முழுமையாக ஆயிரக்கணக்கான வலைகள் தொலைந்து போய்

இருக்கின்றன. பல வீடுகள் புயலினால் சேதம் அடைந்திருக்கின்றன. இவைகளுக்கு, அங்கே இறந்த மீனவர்களுக்கு 6 பேர்களுக்கு மட்டுமே அரசு நிதியுதவி செய்து இருப்பதாக அறிகிறேன். மற்றும் அந்த நிதியுதவியை இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும் என்றும், வலைகளை இழந்த மீனவர்களுக்கு அந்த வலைகளை வாங்குவதற்கும் அரசு உதவி செய்ய வேண்டும்; வீடுகளை இழந்தவர்களுக்கு வீடு கட்டுவதற்கு.................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. ஆர். இராமசாமி : உதவி செய்யவேண்டும். உயிரையும், உடைமையையும் இழந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, மீனவர்களுக்கு இந்த அரசு நிச்சயமாக உதவிகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அங்கு உயிரிழந்த மீனவர்களுடைய குடும்பங்களுக்கு ஏற்கெனவே உதவி அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினரே இங்கே ஏற்றுக் கொண்டு கூறியிருக்கின்றார்கள். இன்னும் தொடர்ந்து உதவிகள் செய்யப்படவேண்டுமேயானால், அவை குறித்துக் கவனித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

(இ) திருமங்கலம் தொகுதியில் அண்மையில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது குறித்து

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் அண்மையில் 6—1—1990 முதல் 9—1—1990 முடிய பெய்த பெருமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் வெள்ள நிவாரண நிதியாக அளித்த மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் முதல்வர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்வதோடு, மதுரை மாவட்டத்தில் என்னுடைய திருமங்கலம் தொகுதியில் 6000 வீடுகளும் பொதுப்பணித் துறையைச் சார்ந்த கண்மாய்களும், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த சாலைகளும் சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடமையை நிறைவேற்றினாலும்கூட, நம்முடைய தமிழக அரசு வருவாய்த்துறை அதிகாரிகளே, வெள்ள நிவாரண